இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 02-11-2024

# காலத்தால் செய்த அரசாணை

தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணை ஒன்று காலத்தால் செய்யப்பட்ட அரசாணையாக இருக்கிறது!

வெப்ப அலையை மாநிலப் பேரிடராக தமிழ்நாடு அரசு அறிவித்து, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. வெப்ப அலையால் உயிரிழப்பவர்களுக்கு 4 லட்ச ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் எனவும் அரசு தெரிவித்துள்ளது. வெப்ப அலை மனித உடல் நலத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளதால், அரசு இதனை மாநிலப் பேரிடராக அறிவித்துள்ளது. இதற்கான அறிவிப்பை, அரசிதழில் வெளியிட்டுள்ளது. வெப்ப அலையை எதிர்கொள்வதற்கான மருத்துவ வசதிகள் மற்றும் ஓ.ஆர்.எஸ்.கரைசல் வழங்குவதற்கு மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம், வெப்ப அலை தாக்கத்தின் போது தண்ணீர் பந்தல்கள் அமைத்து குடிநீர் வழங்குவதற்கும் மாநிலப் பேரிடர் மேலாண்மை நிதியை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசு தெரிவித்துள்ளது.

**'கால நிலை மாற்றம் தான் உலகின் முன் உள்ள மிக முக்கியமான சவால்' என்று 2022 ஆம் ஆண்டே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள். காலநிலை மாற்ற நிர்வாகக் குழு முதலமைச்சர் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. கால நிலை மாற்றம் குறித்து ஆராய இந்திய மாநிலங்களிலேயே முதன்முதலாக மாநாடு நடத்தியது தமிழ்நாடு மட்டும் தான். துறையின் பெயரை "சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை" என்று முதலமைச்சர் அறிவித்தார். தமிழகத்திற்கான காலநிலை திட்டத்தை அறிவித்தார். தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் மூலம் தமிழகத்தின் காடுகளின் பரப்பளவை 21 சதவீதத்தில் இருந்து 33 சதவீதமாக அடுத்த பத்தாண்டுகளுக்குள் உயர்த்த திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கின்றன. இதன் தொடர்ச்சியாக 'பசுமை தமிழ்நாடு இயக்கம்' என்ற பெரும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கினார்கள். இதன் தொடர்ச்சியாக இந்த அரசாணை வெளியாகி உள்ளது.**

கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கடுமையான வெயில் வாட்டியது. வெப்ப அலை மேலாண்மை தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், சமூக நல மையங்கள், மகப்பேறு மருத்துவமனைகள் ஆகியவற்றில் வெப்ப அலையால் பாதிக்கப்படுவோருக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. மருத்துவமனைகளில் போதுமான அளவு ஓ.ஆர்.எஸ். பாக்கெட்டுகள் இருப்பில் வைக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் 1,038 தண்ணீர் பந்தல்கள் அமைக்கப்பட்டன. ஜூன் மாதம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேசிய மாநில வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், 'வெப்ப அலை வீச்சை மாநிலம் சார்ந்த பேரிடராக அறிவிக்க இருக்கிறோம்' என்று குறிப்பிட்டார்.

இதைத் தொடர்ந்து மாநில வருவாய் நிர்வாக ஆணையர், தமிழ்நாடு அரசுக்கு கருத்துரு ஒன்றை அனுப்பி இருந்தார். "தமிழ்நாட்டில் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் 16 நகரங்களில் வெப்ப நிலை 40 டிகிரி செல்சியஸுக்கு மேல் பதிவாகி இருக்கிறது. அதிகபட்சமாக கரூரில் 44 டிகிரி, வேலூரில் 43.7 டிகிரி, ஈரோட்டில் 43.6 டிகிரி செல்சியஸ் வெயில் பதிவாகி உள்ளது. இதனால் முதியோர், குழந்தைகள், இணை நோய் உள்ளவர்கள், திறந்த வெளியில் வேலை செய்வோர், தொழிலாளிகள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு வெயில் அச்சுறுத்தலாக உள்ளது. குறிப்பாக நகர்ப்புறங்களில் வெப்ப அலையின் தாக்கம் அதிகமாக உள்ளது. எனவே வெப்ப அலையை மாநிலப் பேரிடராக அறிவிக்க வேண்டும்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து வெப்ப அலையை மாநிலப் பேரிடராக அறிவித்துள்ளது தமிழ்நாடு அரசு.

**அக்டோபர் 7 ஆம் தேதி சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற விமானப் படையின் 92 ஆவது ஆண்டுவிழாவில் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டவர்கள் வெப்ப அலை காரணமாக மயக்கமடைந்ததைப் பார்த்தோம். கடந்த ஜீன் மாதம் மெக்கா சென்றிருந்தவர்கள் கடுமையான வெப்பத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட செய்திகளையும் படித்தோம். 2023 ஆம் ஆண்டு கோடை மாதத்தில் மட்டும் 733 பேர் வெயிலின் தாக்கத்தால் மரணம் அடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தல் பணியில் இருந்த 33 அலுவலர்கள் இறந்தது குறித்த செய்தியும் வெளியானது. எனவே இதை எல்லாம் மனதில் வைத்து இந்த அரசாணையை தொலை நோக்குப் பார்வையுடன் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.**

இந்தியாவில் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்களில் 5-வது பெருநகரமாக உள்ளது சென்னை. கடந்த 20 ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் விரைவான நகரமயமாக்கலுக்கு ஏற்ப இயற்கை வளம் மற்றும் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் பல்வேறு சவால்களை சமாளிக்கும் வகையிலும் காலநிலைக்கான செயல்திட்டத்தை தயாரிக்கும் C40 நகரங்களுக்கான கூட்டமைப்பில் சென்னை மாநகராட்சி இணைந்துள்ளது. அந்தளவு முன்னெச்சரிக்கையாக அரசு செயல்பட்டு வருகிறது.

வெப்ப உயர்வு தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் என்ற எச்சரிக்கையை ஐ.நா. காலநிலை மாற்றத்துக்கான குழு (ஐ.பி.சி.சி.) கடந்த பிப்ரவரி 28 ஆம் தேதி விடுத்து இருந்தது. **"உலக மக்கள் தொகையில் 70 சதவிகிதம் பேர் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள். வெப்ப அலைகள் (Heat wave) போன்ற தீவிர வானிலையை நகரங்கள் அதிகம் சந்திக்கும். காற்று மாசுபாடு அதிகரிக்கும். போக்குவரத்து, நீர், சுகாதாரம் ஆகியவை பாதிக்கப்படும். இந்த நூற்றாண்டின் இறுதியில் ஆசிய நாடுகளில் வறட்சி நிலை 5 முதல் 20 சதவிகிதம் வரை அதிகரிக்கும்"** என்று அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது. எனவே, அரசுடன் இணைந்து மக்களும் செயல்பட வேண்டிய காலம் இது.

**மண்ணையும் காப்போம், மக்களையும் காப்போம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.10.2024 அன்று மதுரை, தெப்பக்குளத்தில் உள்ள மாமன்னர் மருது சகோதரர்கள் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், பால்வளம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.10.2024 அன்று இராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில், முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117–வது பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அரங்கத்தினை பார்வையிட்டார். உடன் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

## பசும்பொன் செல்லும் வழியில் முதல்வருக்கு

# சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் - மானாமதுரையில் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை!

சிவகங்கை, நவ. 2-

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30ம்தேதி பசும்பொன் தேவர் குருபூஜையில் பங்கேற்பதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் பசும்பொன்னிற்கு புறப்பட்டுச் சென்றார். பசும்பொன் செல்லும் வழியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க மாவட்ட எல்லையான திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாக மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது. முதலாவதாக அமைச்சர் கே ஆர்.பெரிய கருப்பன் பட்டு வேட்டி கொடுத்து முதல்வரை வரவேற்றார். அதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் ஆ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ்ரூசோ ஆகியோர் வரவேற்றார்கள். அதை தொடர்ந்து மானாமதுரை புதிய பேருந்து நிலையம் எதிரில் அமைச்சர் கே. ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் முதல்வருக்கு உற்சாக வரவேற்புஅளிக்கப் பட்டது .

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, ஏஆர்.ஜெயமூர்த்தி, கு. ராசாங்கம், பேரூர் கழகச் செயலாளர் நாகூர் கனி, ஒன்றிய கழக செயலாளர் கள் நாகூர்கனி, திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்ப சாமி, துரை.ராஜா மணி, எம். அண்ணாதுரை, ஆறு. செல்வராஜன், வே.தமிழ் மாறன், கா.வெங்கட்ராமன், எம்.ஜெயராமன், திருமலை முத்துராமலிங்கம், நாகனி ரவி, பூபாலசிங்கம், வே. ஆரோக்கியசாமி, யோக. கிருஸ்ணகுமார், லெ.மு. ரவிச்சந்திரன், நா.நெடுஞ்செழியன், சுப. சின்னத்துரை, கே.ஆர். ஆனந்த், நகர் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, சி.எம்.துரை.ஆனந்த், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் மாநகர செயலாளர் என். குணசேகரன், பெரி.பாலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திரு மதிலதா அண்ணாதுரை துணைத்தலைவர் முத்துசாமி, நகர்மன்ற துணை தலைவர்கள் பாலசுந்தர், எம்.கார்கண்ணன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அண்ணாமலை, சேகர், ஈஸ்வரன், ரவிச்சந்திரன், பாஸ்கரன், மூர்த்தி, இலக்கிய அணி அழகையா, விவசாய அணி காளிமுத்து, வே.கருணாகரன், சுப. தமிழரசன், கு.முருகன், அன்புசெல்வம், பன்னீர்செல்வம், ஜாகீர்உசேன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ், சேவியர், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தா.இரா. நெடுஞ்செழியன், மாவட்ட மகளீர் தொண்டரணி துணை அமைப்பாளர் திலகவதி கண்ணன், மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம்.முருகானந்தம், பேரூராட்சி மன்றத்தலைவர் பி.ஏ.நஜ்மூதீன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துகுமார் உள்பட பல்வேறு அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டார்கள்.

## துறைமுகம் தொகுதியில்

# 22 ஆயிரம் பேருக்கு புத்தாடைகள்!

சென்னை, நவ. 2-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவை முன்னிட்டு அக். 29, 30 ஆகிய இரு நாட்களில் துறைமுகம் தொகுதிக்குட்பட்ட 54, 54அ, 54ஆ, 55, 55அ, 55ஆ, 56, 56அ, 57, 57அ, 59, 59அ, 60, 60அ ஆகிய வட்டங்களை சார்ந்த 22,000 நபர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்ட செயலாளரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு புத்தாடைகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி பொறுப்பாளர் இரா.நரேந்திரன், பகுதி கழக செயலாளர்கள்: எஸ். முரளி, எம். விஜயகுமார், எஸ். ராஜசேகர், ஜி.எம்.தேவன், இசட். ஆசாத், பி.ஸ்ரீராமுலு, என். பி.எம்.ஷேக் அப்துல்லா, இப்ராஹீம் கனி, ஆர்.கலைசெல்வி, டி.போஸ், பா.ஜெகதீஷ், பி.விஜயகுமார், எம். விநாயகம், பிரதிப்குமார், எல்.சம்பத்குமார். ராஜேஷ் ஜெயின், வெ.பரிமளம், எல். நவீன், துறைமுகம் கிழக்கு பகுதி வட்ட கழகச் செயலாளர்கள்: எல்.சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.ஏ. அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார். கே. கவியரசு, ஆ.நா.பார்த்திபன் மற்றும் கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 117–வது பிறந்த நாளையொட்டி, 30.10.2024 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, நந்தனத்தில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.